REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 16 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 298 | December 16, Wednesday, 2020 | 16 பக்கங்கள் | 30/-

## காணொளி மூலம் உறவினர்களுடன் கைதிகள் பேசலாம்



சிறைச்சாலை கைதிகள், தமது உறவினர்களை காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள்

06

## LPL இறுதிப்போட்டி



### ஜப்னா– கோல் அணிகள் இன்று பலப்பரீட்சையில்

இலங்கை ரசிகர்களது ஆவலுக்கு மத்தியில் விறுவிறுப்பான போட்டி







முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டி இன்று இரவு 7 மணிக்கு ஹம்பாந்தோட்டை, சூரியவெவ மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணி, காலி கிளாடியேட்டர்ஸ் அணியுடன் மோதவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையும்

06

# நாட்டில் அரசியல் கைதிகள் என்று எவருமே கிடையாது

## அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மம்பில மீண்டும் வலியுறுத்து

ஷம்ஸ் பாஹிம்

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் கிடையாது.

**பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதானோர் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாத சந்தேகநபர்கள்**

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாத சந்தேக நபர்களென இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மம்பில தெரிவித்தார்.

தமிழ் எம்.பிக்கள் பிரதமருக்கு மகஜர் வழங்கியதற்காக அதிலுள்ளவற்றை பிரதமர் அங்கீகரித்ததாக அர்த்தமாகாதென்று குறிப்பிட்ட அவர், கைதிகள் வயது, பால் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டாலும் இன ரீதியாக வகைப்படுத்தப்படுவதில்லையென்றும் கூறினார்.

06

**பிரதமருக்கு எவரும் தமது பிரச்சினைகளை முன்வைக்கலாம். அதற்காக அவர் அவற்றை ஏற்றுக் கொண்டதாக அர்த்தமில்லை. தமிழ் எம்பிக்கள் கையளித்த மகஜரும் அதுபோன்றதே!**



# கொழும்பு உ… கட்டடத்தில் பாரிய தீ






லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு புதுக்கடை உச்ச நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அதற்கிணங்க முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக 3 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் ஆவணங்கள் பகுதிக்கு எவ்வித பாதிப்பும்

06







## இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த 36 இந்திய மீனவர்கள் நேற்று கைது



### 05 இழுவைப்படகுகளும் கடற்படை வசம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 36 இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு கடற்பகுதிகளிலும் கடற்படையினரும் கடற்பகுதி பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட

06

## கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களது உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதா?

### அரசாங்கத்திற்கு எதுவும் தெரியாது என்கிறார் அமைச்சர் கெஹலிய

ஷம்ஸ் பாஹிம்

கொரோனாவினால் உயிரிழக்கும் சடலங்களை மாலைதீவிற்கு அனுப்ப அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை. நிபுணர் குழுவின் பரிந்துரை அடிப்படையிலே அரசாங்கம் இது தொடர்பில் செயற்படுகிறதென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் Zoom ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

06



## 100 அடி பள்ளத்தில் வீழ்ந்த கெப் வாகனம்




ஹற்றன் சுழற்சி நிருபர்

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊவாகலை பகுதியில் நேற்று (15) காலை 10

06

இரத்தினபுரி திருமண வீட்டு கொத்தணி:

## கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை 15 ஆனது

## முன்னாள் எம்.பி அப்துல்லா கிண்ணியாவில் கைது

## ரஜினியின் கட்சியின் பெயர் மக்கள் சேவை கட்சி

## மாகாண சபைத் தேர்தலில் SLPP க்கு அமோக வெற்றி

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன